தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 103

நம் நாடு

திராவிடத் தினஇதழ் — ஆசிரியர்: அண்ணதுரை

சந்தா விகிதம்:
1 வருடம் ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
சாம்பிள் பிரதிகள் அனுப்ப இயலாது.

THE "NAM NADU" A TAMIL DAILY — THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: புரட்டாசிய் 26உ திங்கள் (12—10—53) ★ ★ ★ வெளியீடு: புரட்டாசிய் 27உ செவ்வாய் (13—10—53)

கிராமத்தவரால் 'கைது' செய்யப்பட்ட போலீஸ் குழு!

ஓர் இரவைப் பாதுகாப்புக் கைதிகளாகவே கழித்தனர்

அறப்போர் வீரர்களைக் கைது செய்ய முயன்றதின் எதிரொலி

விடிந்ததும் விடுதலையடைந்த போலீஸ் படையினர் தேடிச் சென்ற 32 நபர்களையும் கைது செய்தனர்!

சூரத், அக். 11—

பர்திக்குப் பதினைந்து கல் தொலைவில் உள்ள காகா டேபர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்களான சேட் சத்தியாகிரகிகளைக் கைது செய்வதற்காக சிறு போலீஸ் படையினர், மூன்று தினங்களுக்குமுன் மாலை இருட்டும் நேரத்தில் சென்றனர்.

கிராமத்தைச் சேர்ந்த சுமார் 1000 பேர்கள் அப்போலீஸ் படையைச் சூழ்ந்துகொண்டு, அப்படையையே 'கைது' செய்துவிட்டனர். இரவு முழுதும், போலீஸ் படை, கிராம மக்கள் வியூகத்துக்குள் சிக்கிக் கிடந்தது.

பொழுது புலர்ந்ததும் போலீஸ் படையினர் விடுவிக்கப்பட்டனர். அதன் பிறகு சத்தியாக்ரகத்தில் கலந்து கொண்டவர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட 32 நபர்களை, போலீஸ் படை கைதுசெய்து இட்டுச் சென்றது.

புதிய 3 மந்திரிகள் நியமனங் குறித்து காங்கிரஸ் வட்டாரத்தில் மகிழ்ச்சி!

—(:)—

சர்க்கார் உயர்தர அதிகாரிகளின் அதிருப்தியும், ஆரூடமும்!

—(0)—

'சொந்தக் காரணங்'களுக்காக என மூன்று மந்திரிகள் விலகுவரென்று அதிகாரிகள் யூகம்

சென்னை, அக். 12—

சென்னை ஆச்சாரியார் சர்க்காரில், ஏற்கனவே 15 மந்திரிகள் இருந்துவந்தனர். ஆந்திர மாநில அமைப்பின் காரணமாகவும், பெல்லாரியில் சில பகுதிகள் மைசூருடன் இணைந்துவிட்டதினாலும், அறுவரை விலக்கவேண்டியதாகப் போய்விட்டது.

அதற்குப் பதிலாக, தோழர்கள் பக்தவத்சலம், ராஜாராம், தோழியர் ஜோதி வெங்கிடாசலம் ஆகிய மூவர்களை மந்திரி சபையில் நியமித்துக்கொண்டார் ஆச்சாரியார்.

இந்தப் புதிய நியமனங் குறித்து, காங்கிரஸ் கட்சியினரிடையே அதிக மகிழ்ச்சி நிலவுவதாக கூறப்படுகிறது.

ஆனால் இந்த மந்திரி சபை, எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் நீடித்து இருக்காது என்றும், ஏற்கனவே இருந்த மந்திரிகளில் தோழர்கள் கே. வேங்கிடசாமி நாயுடு, ராமநாதபுரம் ராஜா, டாக்டர் கிருஷ்ண ராவ் முதலிய மூவரையும், 'சொந்தக் காரணங்'களுக்காக விலக்கக்கூடும் என்றும், சென்னை சர்க்கார் உயர்தர அதிகார வட்டாரத்திலிருந்து கிளம்பும் நம்பிக்கையான செய்தி என்று, பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஆங்கில தின இதழ் அறிவிக்கிறது.

மலேயா சட்டசபை

இந்திய உறுப்பினர்கள் விலகினர்

சிக், அக். 10—

மலேயா சட்ட சபையில் உள்ள இந்திய உறுப்பினர்கள் 5 பேரும், மலேயா அமைச்சரவையில் இந்தியர் ஒருவருக்குக் கூட இடமளிக்காததைக் கண்டிக்கும் முறையில், தங்கள் தங்கள் பதவிகளிலிருந்து விலகிக் கொள்வதாக இன்று அறிவித்து விட்டனர்.

அண்மையில் மலேயா அமைச்சரவை விரிவாக்கப்பட்டபோது, மலேயா சீனர் இருவருக்கு மட்டும் அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது.

இது பற்றி, இந்திய உறுப்பினர்கள், பிரிட்டிஷ் ஹைகமிஷனருக்கு எழுதிய கடிதமொன்றில், "தனிப்பட்டவர்கள் நலன் கருதி நாங்கள் பதவிகளிலிருந்து விலக வில்லை; மலேயா அமைச்சரவையில் இந்தியருக்கு ஒரு இடம் கிடைக்குமென எதிர்பார்த்து நாங்கள் ஏமாந்தோம்," என்று குறிப்பிட்டிருந்தனர்.

கல்லக்குடி அறப்போர்

★

இன்று

91-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, இராம. சுப்பையா, மற்றும் பலர் சிறையில்

இன்று

90-வது நாள்

திருவனந்தபுரத்தில் நவம்பர் 20-ந் தேதி முதல் ஆரம்பமாகும் 'முறஜபம்' வழிபாடுகளுக்காக, ரூ. 8 லட்சம் செலவாகுமெனத் தெரிகிறது. இதில் 3000-க்கு மேற்பட்ட நம்பூத்திரி பிராமணர்கள் கலந்து கொள்வார்கள்.

'வெற்றி பெற்றால் திரும்புவேன்! இல்லையேல் முயற்சியில் என் உயிரையே பலி கொடுப்பேன்'

இந்து—சீக்கியரிடை பகையை மூட்டும் 'மதச் சார்பற்ற சர்க்காரி'ன் இழி செயல்!

கலந்து பேசுதல், கடிதப் போக்குவரத்து ஆகிய முறைகள் முழுத் தோல்வி

பாகிஸ்தான் குடியரசாகும்!

லண்டன், அக். 10—

பாகிஸ்தான், சீக்கிரமே குடியரசாகப் பிரகடனம் செய்யும் என்றும், பின்னரும், இந்தியாவைப் போலவே காமன் வெல்த்தில் தொடர்ந்து இருந்துவரும் என்றும் 'டெய்லி டெலிகிராப்' எழுதுகிறது.

சீக்கியத் தலைவர் தாராசிங்கின் சூளுரையும், யாத்திரையும்!

அமிர்தசரஸ், அக். 11—

இரண்டு தினங்களுக்குமுன், இங்கு சீக்கியர்கள் கூட்டமொன்றில் சீக்கியத் தலைவர் மாஸ்டர் தாராசிங் பேசுகிறபொழுது, தங்கள் கோரிக்கைகளுக்கு இணங்க மறுப்பதின் மூலம், சர்க்கார் தங்களை 'உண்ணு நோன்பு' இருக்க பலவந்தத்துக்குள்ளாக்கினாலன்றி, தாம் உண்ணு நோன்பு மேற்கொள்ளப் போவதில்லை என்று குறிப்பிட்டார்.

'வெற்றியுடன் அமிர்தசரசுக்குத் திரும்புவேன்; இல்லையேல், வெற்றி முயற்சியில் எனது உயிரையே பலியிடுவேன்,' என்றும் அவர் கூறினார்.

சீக்கியர்களுக்கும், இந்துக்களுக்கும் இடையில் பகையை மூட்டி, ஒற்றுமையைக் குலைக்கும் துவேஷப் பிரசாரத்தை சர்க்கார் தீவிரமாகச் செய்து கொண்டே, 'மதச் சார்பற்ற சர்க்கார்' என்று சொல்லிக்கொண்டு வருகிறது என்றும், முடியாட்சியை விட கீழாக நடந்து கொள்ளும் இந்த சர்க்காரை அம்பலப் படுத்தியே ஆக வேண்டும் என்றும் தாராசிங் அறிவித்தார்.

கடித மூலமாகவும், நேர் மூலமாகவும் ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை, செயலற்ற சர்க்கார் பின் வாங்குகிறது.

மாஸ்டர் தாரா சிங்கும், அவருடைய யாத்திரையின் கும் இங்குள்ள குருத்துவாரத்தில் தொழுதுவிட்டு, ஊர்வலமாக வந்து, டில்லி நோக்கிப் புறப்பட்டனர்.

பட்டாணியரின் பிரிவினை தேம்

காபூல், அக். 9—

பாகிஸ்தான் பிடியிலிருந்து விலகி, எல்லைப்புற மக்கள் விடுதலை பெறும் நாள் விரைவிலே வந்து சேருமென தான் நம்புவதாக ஆப்கன் புது பிரதமர் சர்தார் முகமது தாவூத் கான், தெரிவித்தார்.

70 லட்சம் பட்டாணியர்களின் பிறப்புரிமையை, சுதந்திர தாகத்தை, பாகிஸ்தான் சர்க்கார் மறுப்பது கண்டிக்கத் தக்கதென்றும், இஸ்லாமிய நீதிக்கே அது முரணானது என்றும், பட்டாணிய மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு ஆப்கனிஸ்தான் என்றும் அனுதாபம் காட்டுமென்றும் அவர் சொன்னார்.

இந்தி மொழி பேசுவோரின் குறுகிய எண்ணம்

பிரசாத் அறிவுறுத்துகிறார்

பம்பாய், அக். 11—

இந்தியாவின் பல்வேறிடங்களில் வாழும் எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு, இந்தி மொழியை எளிமையாக்குமாறு ஜனாதிபதி பிரசாத், இன்று, இந்தி ஆதரவாளர் கூட்டத்தில் பேசினார்.

தேசிய மொழி வளர வேண்டுமானால், குறுகிய மனப்பான்மை ஒழிய வேண்டுமென்றும், மொழிப் பிரச்சினையை வகுப்புத் தகராறாகவோ, ஜாதித் தகராறாகவோ ஆக்கக் கூடாதென்றும் அவர் சொன்னார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஐவர் சிறையில்!

இன்று

42-வது நாள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை : 12—10—1953 திங்கள்

சி. ஆர். மலானிசம்!

[1]

கனம் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களை, நாம் மறந்து இருக்கலாம், அவர் செயல் குறித்து எழுதுவதைக் கொஞ்ச நாளைக்கு நிறுத்தி வைக்கலாம், அவர் எவ்வளவு உயரத்தில் துள்ளி குதித்தாலும், மறுபடியும் தரைக்குத்தானே வந்தாக வேண்டும் என்று கவலை யற்று இருக்கலாம் என்ற முடிவிற்கு வந்தாலும்கூட, அவர் நம்மைக் குறித்தும், நமது வாயிலாக திராவிடப் பெருங்குடி மக்களைக் குறித்தும் ஏதாவது தினம் தினம் சலசலப்புச் செய்யாமல் இருக்கமாட்டார்போல் தெரிகிறது. திராவிட இனத்தை தனது ஆயுட்காலத்துக்குள் — இல்லை —தனது ஆட்சி காலத்திற்குள் — குழிதோண்டி புதைத்து, புதைத்த இடத்தில் புல் முளைக்கச் செய்துவிடவேண்டும் என்று, உறுதியான முடிவிற்கு வந்து, அவர் பேசிவருவதாகவே, அவருடைய நடைமுறையைக் கொண்டு நாம் சந்தேகிக்க வேண்டியதாக இருக்கிறது. இன்று பெரும்பாலும் அவருடைய பேச்சில் தெளிவு கொஞ்சமும் இருப்பதில்லை. சங்கிலிபோன்ற தொடர்பு இருப்பதில்லை. நயமிருப்பதில்லை; நாவடக்கம் அறவே இருப்பதில்லை!

முன்னுக்குப்பின் முரண்படப் பேசுவதில் ஆச்சாரியாரைப்போல் முதல்பரிசு வாங்கக் கூடியவர்கள். அவருடைய கூட்டத்தில் இன்று ஒருவரும் இல்லையென்றே துணிந்து கூறலாம். மோகனாஸ்தரம், வஜ்ஜிராஸ்தரம், பாசுபதாஸ்தரம் என்ற எத்தனை எத்தனையோ ஆயுதங்களை எல்லாம், அவர் ஒவ்வொரு நிமிஷமும் நம்மீது இடைவிடாமல் மாரி போல் பொழிந்து வருகிறார்.

விருத்தாப்பிய விளைவு இது என்று, அவருடைய பேச்சை நாம் கொள்வதினால்தான், அவருடைய பேச்சில் நமக்கு ஆத்திரம் பிறப்பதில்லை! அதற்குப் பதிலாக, அவர் மீது நமக்குப் பரிதாபமே ஏற்படுகிறது!

ஆச்சாரியார் நிரம்ப வாதத் திறமை உடையவர் என்றும் அதிகமான நுண்ணறிவு வாய்க்கப் பெற்றவர் என்றும், பிறர் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம். ஆனால் நாம் நம்பினது கிடையாது. ஏதோ அவர் மீது கொண்டுள்ள பற்றுதலினாலோ, பந்துமித்திர பாசத்தினாலோ, பல்விழந்துள்ளக் காரணத்தால் கிழவர்கள் பொரிமாவை மெச்சிக் கொண்டாடுவதுபோல், தங்களிடம் 'அது' இல்லாத காரணத்தால், ஆச்சாரியாரிடம் 'அது' அதிகமாக இருப்பதாகக் கொள்ளுகிறார்கள்—கொண்டாடுகிறார்கள் என்பது தான் நமது முடிந்த முடிவு.

அவருக்கு 'அது' முன்னாள் இருந்ததோ இல்லையோ அது எப்படியோ கிடக்கட்டும். ஆனால், அவரிடம் ஏற்கனவே 'அது' இருந்திருந்தாலும்கூட, இப்பொழுது 'அது' ஆச்சாரியாருக்குக் கிடையாது என்பது அவருடைய சொற்பொழிவுகளில் இருந்தே வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. சாதாரணமானவர்களுக்குச் சராசரி இருக்கும் அறிவுத் திறத்தைக் கூட ஆச்சாரியாரிடம் இன்று நாம் எதிர்பார்க்க முடியவில்லை.

இந்தியத் துணைக்கண்டத்தில் பிறந்துள்ள அனைவரும் 'இந்திய' என்றும், ஒவ்வொருவரும் 'இந்தியப் பிரஜைகள்' என்றும் காங்கிரஸ் கட்சியினரே ஒன்று கூடி, முறையில்லா முறையில் உருவாக்கப் பட்டுள்ள இந்திய அரசியல் சட்டம் விளக்கமாகக் கூறுகிறது. அந்தச் சட்டம் தான் அமுலிலும் இருக்கிறது. ஆச்சாரியார் சர்க்காரும் அதன் ஆணைப்படி அமைந்து, இயங்கி வருவதுமாகும்.

காங்கிரஸ் கட்சியினரால் உருவாக்கப்பட்டுள்ள அரசியல் சட்டம், இங்குள்ளோர் அனைவரையும் 'இந்தியன்' என்று பெயரிட்டு அழைக்கிறது. ஆனால் ஆச்சாரியாரோ, அமெரிக்க வெள்ளையர் பீவர்லி நிக்கலஸ் கூறியுள்ளது போல், இத்துணைக் கண்டத்தில் 'இந்தியன்' என்று ஒருவரும் மருந்துக்கும் கிடையாது என்கிறார். இதை நாமும் ஒப்புக் கொள்ளுகிறோம். உண்மையை, நம்மையும் அறியாமல் ஆச்சாரியார் வெளிப்படையாகக் கூறியுள்ளதைநாமும் வரவேற்கிறோம். நிற்க,

சில நாளைக்குமுன் ஆங்கிலோ இந்தியர்கள் கூட்டத்தில் அவர் பேசினார். அதுசமயம் அவர் குறிப்பிட்டதாவது:—

"உங்கள் வகுப்பைப்போல் ஒரு சிறு வகுப்பைச் சார்ந்தவன் தான் நான். காங்கிரசில் உள்ள, அல்லது சட்டசபையில் உள்ள ஒவ்வொரு கட்சி அங்கத்தினரும் ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர் என்ற எண்ணம் இருப்பதால், அவர்களும் உங்களைப்போல ஒரு சிறுபான்மை வகுப்பினராகவே நினைக்கின்றனர்."

என்றும்,

"ஒவ்வொரு ஜாதியும் தன்னை விருத்தி செய்துகொள்ள வேண்டுமென்று முயல்கிறது."

"இதனால் தனிப்பட்ட ஜாதி உணர்ச்சி ஏற்படுகிறது."

"எனினும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவினாலொழிய முன்னேற முடியாது."

என்றும்,

"உதவி செய்வதாக இருந்தாலும் நெருங்கினவர்களுக்குத் தானே உதவி செய்ய முடியும்?"

"ஆதலின் முதலியார்கள், அல்லது நாயுடுமார்கள், நாயக்கர்கள் யாராயிருந்தாலும் தங்கள் ஜாதிக்கு உதவ வேண்டுமென்று கூறுகின்றனர்."

"இதனால் ஜாதி என்ற வியாதி இந்நாட்டில் வளர்ந்தோங்கி விட்டது."

"பிராமணர்களிலும் பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன."

"இதர விஷயங்களில் சிறந்தவர்கள் என்று கருதப்படுபவர்கள், இந்த ஜாதி விஷயத்தில் தவறு செய்து கொண்டு இருப்பதினால், நாட்டு முன்னேற்றத்துக்குத் தடங்கலாய் இருக்கின்றனர்"

என்றும், ஆச்சாரியார், அருமையானதோர் விளக்கத்தைக் கொடுத்துள்ளார்.

ஆச்சாரியார் பிடித்துக்காட்டும் இந்தப் பட்டப்பிடிப்பைத் தான் சுட்டிக் காட்டி, இந்த அவதி தரும் அலங்கோல நிலைக்கு இருப்பிடமாக இருக்கிற பார்ப்பனீயத்தை—ஆரியத்தை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று, நமது கழகம் தீவிரமாகப் பாடுபட்டு வருகிறது.

ஆச்சாரியார் குறித்துள்ளபடி 'சிறந்தவர்கள்' என்று சொல்லப்படுகிற பார்ப்பன மக்களே படிக்கலாம், பதவியில் இருக்கலாம், என்ற நிலை வேத காலத்திலும், வேதத்தில் விதித்துள்ளபடி அமுலில் இருந்தது. முடி மன்னர்கள் காலத்திலும் இதே நிலை. வெள்ளை ஏகாதிபத்தியத்திலும் இந்த அக்கிரமமே தொடர்ந்தது. அழுத்தி வைக்கப்பட்ட சமுதாயம் வீறுகொண்டு எழுந்தது.

காலஞ்சென்ற வெள்ளுடை வேந்தர் தியாகராயர், கல்வித் துறையிலும் உத்தியோகத் துறையிலும் வேதக் கட்டளை பேசி, தகுதி திறமைகூறி தாங்களே அனுபவித்து வந்த பார்ப்பன ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தி, பரணி பாடினார். வெற்றியுங் கண்டார்.

எல்லா ஜாதியிலும் பார்ப்பன ஜாதிதான் மேலான ஜாதி, பல்லக்கு ஏறப் பிறந்த ஜாதி என்ற அக்கிரம ஆணவத்தை சுக்கு நூறுக்கினார். கல்வித்துறை, வேதியனுக்கும், வில்லேந்திக்குமே சொந்தமாக இருந்துவந்த ஆரிய ஆசிரம முறை, ஆங்கிலேயன் காலத்திலும் இருந்துவந்த கல்வித் துறை, அனைவரும் படித்துப் பட்டம்பெறும் பொதுத் துறையாக மாறியது. இந்தப் பெருமை முழுதுக்கும் உரியவர் தியாகராஜரே யாவர்.

புராண இதிகாச காலத்திலும் சரி, வரலாற்றுக் காலத்திலும் சரி, முடி தாங்கிகளின் அடி தாங்கிகளாக மற்றவரும், அந்த முடி தூக்கிகளைத் தங்கள் பாதத்தில் காணுபவர்களாக ஆச்சாரியார் குறிப்பிட்டுள்ள அந்தச் 'சிறந்தவர்கள்', ஆரிய முனிசிரேஷ்டர்களாகவும் இருந்து வந்தது போன்றே, ஏகாதிபத்திய உத்தியோக மண்டலங்களும் கொடுத்துவந்த கோரக் காட்சியை, உடைத்தெறிந்துத் தரைமட்டமாக்கிய சிறப்பு முழுதும் மறைந்த மாவீரர் தியாகராஜரையே சாரும்.

ஒரு ஜாதிக்கு எதிராக எழுப்பப்பட்ட துவேஷக் கூச்சல் அல்ல இது. பல்லாயிர ஆண்டுகளாக அடிமையாக்கப் பட்டுக் கிடந்த ஒரு பெரிய ஜன சமுதாயத்தின் மகத்தான விடுதலைப் போராட்டத்தின் வரலாறே யாகும். புத்தருக்குப் பின் இத்துணைக் கண்டத்தில் எழுந்து வெற்றி பெற்ற முதல் மனித குல விடுதலை இயக்கம் இதுவேயாகும். இந்த இயக்கம் பேசியது ஜாதித் துவேஷம் அல்ல. அனைவருக்கும் ஒரு பொது நிலையைக், கோரிக்கையாக கொண்ட உரிமை வேட்கை பொதிந்த இயக்கம் இது.

ஆச்சாரியார் சொல்லும் 'சிறந்தவர்களை'ப் போலவே மற்றவர்களுக்கும் சரியான பயிற்சியும் வாய்ப்பும் தரப் பட்டால், அதற்கான வழிவகை செய்யப்பட்டால், எல்லா மனிதர்களுக்குள்ளும் மறைந்து கிடக்கும் 'ஆக்கும் திறன்' ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் என்ற பேருண்மையை, தியாகராஜர் துவக்கிய பொதுமை இயக்கம் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் முறையில் மெய்ப்பித்துக் காட்டிவிட்டது.

பார்ப்பனர்களுக்கே 'படிப்பு' வரும், பார்ப்பனர்களுக்கே உத்தியோகம் பார்ப்பதற்கான 'தகுதி திறமை' உண்டு என்ற பேய் மருட்டை, தியாகராஜர் மனித சமத்துவ இயக்கம், தலைவிரி கோலமாய் விழுந்தடித்து ஓடச் செய்திருக்கிறது.

தூத்துக்குடியில் தலைமை நிலையப் பொறுப்பாளர்

கடலூர், அக். 11 — தூத்துக்குடி தோழர்களின் நிலையறிந்து, அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் சதி வழக்கு பற்றிய விவகாரங்களைக் கவனித்து ஆவன செய்ய, தலைமை நிலையப் பொறுப்பாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள், 13—10—53 காலை சென்னை வந்து, அன்றிரவு திருநெல்வேலி எக்ஸ்பிரசில் தூத்துக்குடி செல்வார். அவருடன் வழக்கறிஞர்கள் கே. நாராயணசாமி, இரெ. இளம்வழுதி ஆகியோரும் பாளையங்கோட்டை, தூத்துக்குடி ஆகிய ஊர்களுக்குச் சென்று, வழக்கறிஞர்களையும், ஆதரவாளர்களையும் சந்திப்பார்கள்.

★★★★★★★★★★★

தூத்துக்குடி சதி வழக்கு நிதி

இராமநாதபுர மாவட்ட தி. மு. கழக கிளைகளுக்கு

தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்குப் பணமனுப்பக் கோரும் தலைமை நிலையப் பொறுப்பாளர் அவர்களின் அறிக்கைக்கிணங்க, நன்கொடை அனுப்ப வேண்டியது நமது கடமையாகும். ஆகையால், கிளைக் கழகச் செயலாளர்கள், அருள் கூர்ந்து, ஆங்காங்கே கூடுமான வரை அதிகமாக நன்கொடை வசூலித்து, அ. பொன்னம்பலனார், 'அறிவகம்,' இராயபுரம், சென்னை-13 என்ற முகவரிக்கு அனுப்பிக் கொடுக்க வேணுமாய்க் கோருகிறேன் என்று, இராமநாதபுர மாவட்ட தி. மு. கழக செயலாளர் சிவ. சண்முகசுந்தரன் அறிவிக்கிறார்.

சென்னை தி. மு. கிளைக் கழகச் செயலாளர்கள் கூட்டம்

11—10—53 ஞாயிறு மாலை 6-மணிக்கு இராயபுரம், 'அறிவகத்'தில், சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில், சென்னையைச் சார்ந்த தி. மு. கிளைக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. கிளைக் கழகங்களின் எதிர்கால ஆக்க வேலைகளைப் பற்றி விவாதித்து முடிவு செய்யப்பட்டதுடன், எந்த கிளைக் கழகமும், மாவட்ட கழகத்தின் ஒப்புதலின்றி எந்த நேரடி நடவடிக்கைகளிலும் இறங்கக் கூடாதென்ற முடிவு செய்யப்பட்டது. செயலாளர் நன்றி கூற, கூட்டம் இரவு 9-30-மணிக்கு இனிது முடிந்தது.

நவசீனமீது 'அரிசி அறிக்கை தாள்' குண்டு வீச்சு!

தான் அதிகாரம் பெற்ற 20-ம் ஆண்டு துவக்க விழா நாளில் செய்த அற்புதம்

சியாங் - கே - ஷேக்கின் அதிகார ஆசை அடங்கா ஆசை!

பார்மோசா, அக். 11— பார்மோசாவில் தங்கிக் கிடக்கும் சியாங்-கே-ஷேக்கின் ஆகாய விமானங்கள், நேற்று நவசீனத்தின் விண்ணில் வட்டமிட்டு, நாலு டன்னுக்குக் குறையாத 'அரிசி, அறிக்கைக் காகிதங்கள்' வீசின என்று, இங்கு அறிவிக்கப்படுகிறது.

இது, சியாங்-கே-ஷேக் அதிகாரத்துக்கு வந்த 20-வது ஆண்டு துவக்கதினத்தை ஒட்டி செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

அங்கு வீசப்பட்ட வேண்டுகோள் அறிக்கையில், எதிர்ப்புச் சக்தியை ஒன்றுபடுத்த வேண்டுமென்றும், நவசீனத்தைத் தாக்க விரைவில் பலம் பெற்றாக வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளன என்றும் சொல்லப்படுகிறது.

டிரீஸ்டி முடிச்சு இறுகுகிறது

எதுவரினும் எதிர்த்தே தீருவோம்—'ஏ' பகுதி எமதே என்கிறார் டிட்டோ

பென்கிரேட், அக். 10—

ஆங்கிலோ—அமெரிக்கத் துருப்புகள் விரைவில் வாபசாகும்போது, இத்தாலியத் துருப்புகள், டிரீஸ்டியின் 'ஏ' பிராந்தியத்தில், அமெரிக்கா—பிரிட்டன் சொல்லியுள்ளபடி நுழையுமானால், யூகோஸ்லாவியா, அதை ஆக்கிரமிப்பாகவே கருதுமென்றார், அதன் ஜனாதிபதியான டிட்டோ.

சுதந்திரப் பிரதேசமான டிரீஸ்டியின் 'பி' பிராந்தியத்திற்கு அடுத்தாற்போல் மூன்று டிவிஷன் ஆயுதப் படைகளை டிட்டோ, அனுப்பியபோது, 'ஏ' பிராந்தியத்திற்குப் போகும் எல்லாப் பாதைகளிலும் அமெரிக்க—பிரிட்டிஷ் டாங்கிப் படைகள் காவல் காத்து வருகின்றன.

எதிர்ப் படைகள், ஒரு சில மைல்களுக்கு அப்பால் உள்ளன. எல்லையை மீறி யுகோஸ்லாவிய டாங்கிகள் நகர்ந்தால், ரத்தக்களறி ஏற்படும்போல் தோன்றுகிறது. இதில் நேச நாடுகளின் பலம் ஆறில் ஒன்றாக இருக்கிறது.

ஜனாதிபதி டிட்டோ லெஸ்கோவாக்கின் செர்பியன் நகரில் பேசும்போது, டிரீஸ்டி சம்பந்தமான ஆங்கிலோ—அமெரிக்க முடிவை யுகோஸ்லாவியா ஏற்க மறுக்கிறது என்று மறுபடியும் எடுத்துக் கூறினார். 'பி' பிராந்தியப் பகுதிக்கு துருப்புகளை அனுப்பியுள்ளதையும், தனது புதிய திட்டத்தையும் விவரித்தார்.

அவரது புதிய திட்டங்கள், "(1) சுதந்திரப் பிரதேசத்தில் இரு உரிமையுள்ள பகுதிகளை ஏற்படுத்தி, யூகோஸ்லாவியாவின் கீழ் ஒன்றும், இத்தாலியின் கீழ் மற்றொன்றுமாக அவை இருக்கவேண்டும்

(2) இதாலியின் பாகமாக டிரீஸ்டி நகரைக் கொடுக்க வேண்டும். இதற்கு முன்பு டிட்டோ இதை அனேகமாக நாட்டுப் பொறுப்பில விட வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்.

(3) இப்போது யுகோஸ்லாவிடமுள்ள 'பி' பிராந்தியத்துடன் டிரீஸ்டியைச் சுற்றியுள்ள உட்பகுதிகள் முழுவதையும் தரவேண்டும். இங்கு ஸ்லோவின் குடிகளே பெருவாரியாக வாழ்கின்றபடியால், அதை உரிமையுள்ள பகுதியாக யுகோஸ்லேவியாவின் ஆட்சியின் கீழ் 10 ஆண்டுகளுக்கு மேல் இருக்கவேண்டும்.

இம்மாதிரி செய்வது ஒன்றே எனக்குச் சரியான வழியாகத் தோன்றுகிறது" என்றார் டிட்டோ.

சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக ஆயுதப்படைகளைப் பயன்படுத்துவது போன்ற விதிமுறைகளை உள்ளடக்கி உள்ள ஐ. நா. சாசனப்படி யுகோஸ்லேவியாவிற்குத் தன் விருப்பப்படி எல்லாவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உரிமையுண்டு என்று அவர் மேலும் சொன்னார்.

"இம்முடிவைத் தவிர நான் வேறுவிதத் திட்டமும் காண விரும்பவில்லை. இந்தத் திட்டத்தை மேற்கத்திய நாட்டினர் வெறும் பகட்டாகக் கருதுவார்களேயானால், ஐரோப்பாவிலுள்ள இந்த பாகத்தில் சமாதானம் ஏற்படாது." என்று எச்சரித்தார் டிட்டோ.

ஆங்கிலோ—அமெரிக்கரின் திட்டத்திற்கு அடிபணிவதைவிட மேற்கத்திய உதவிகளை யுகோஸ்லாவியா எதிர்க்கவே செய்யும். தனது புதிய திட்டத்தைப் பிரிட்டனும், அமெரிக்காவும் அலட்சியம் செய்தால், யூகோஸ்லாவியாவுக்கு மேற்கு நாடுகளுடன் உள்ள நட்பு பாதிக்கப்படும்.

யுகோஸ்லாவியாவுடன் இத்தாலி ஒத்துழைக்க இன்னும் தயாராகவே இருக்கிறது என்று ரோமிலுள்ள இத்தாலிய வெளிநாட்டு இலாகாவிலுள்ள ஒருவர் கூறினார்.

யுகோஸ்லாவியக்குச் சொந்தமல்லாத பிராந்தியத்தில் இத்தாலியத் துருப்புகள் இருப்பதை ஜனாதிபதி டிட்டோ 'ஆக்கிரமிப்பு' என்று சொல்வதைப் புரிந்துகொள்வது கஷ்டமாக இருக்கிறதென்றார் லண்டன் வெளிநாட்டு இலாகாவில் ஒருவர்.

'ஜனாதிபதி டிட்டோவின் பயமுறுத்தல் வெத்து வேட்டே; அது, வெளியுலகில், அவரது நிலைமையை உயர்த்தாது,' என்று ரோமிலுள்ள அதிகாரபூர்வமான இத்தாலிய வட்டாரத்தில் கூறப்படுகிறது

★

வாஷிங்டன், அக். 10—

டிரீஸ்டியின் நகராறக்கு உட்பட்ட பிராந்தியத்தை, இத்தாலியின்கீழ் கொண்டுவருவது சம்பந்தமான தனது திட்டத்தை அமெரிக்கா, டிட்டோ எதிர்த்தும் வாபஸ் பெறப் போவதில்லை என்று இன்று அறிக்கை விட்டிருக்கிறது.

டிரீஸ்டின் 'ஏ' பிராந்தியத்தை இத்தாலிக்குக் கொடுக்கும் பிரிட்டிஷ் அமெரிக்கத் திட்டத்தை எதிர்த்து டிட்டோ எச்சரிக்கை விட்ட பின்பும், தமது பழைய கருத்தையே அமெரிக்க ராஜாங்க இலாக்கா மீண்டும் வற்புறுத்திக் கூறுகிறது.

ஆங்கிலோ — அமெரிக்க கூட்டறிக்கை

இலண்டன், அக். 8—

டிரீஸ்டியின் 'ஏ' பகுதியிலிருந்து தங்கள் படைகளை வாபஸ் பெறப் போவதாகவும், அப்பகுதியை இத்தாலியிடம் ஒப்படைக்கப் போவதாகவும், பிரிட்டனும், அமெரிக்காவும் அதிகார பூர்வமாக அறிவித்தன.

சென்ற யுத்தம் முடிந்ததிலிருந்து 'ஏ' பகுதி, பிரிட்டிஷ்—அமெரிக்கக் கூட்டுப் பார்வையில் இருந்து வந்திருக்கிறது.

மேற்கண்ட முடிவை, இத்தாலிய வட்டாரம்வரவேற்கின்றன.

★ வீரன் குரல்! ★

" மகிழ்கிறேன்! மகிழ்கிறேன்!!"—என்று ஓடிவந்தான், வீரன்.

" என்னப்பா; உன் மகிழ்ச்சிக்குக் காரணம்?"—என்றேன், நான்.

" ஆச்சாரியார், தி. மு. கழகத்தை, தன்னுடைய எதிரி நம்பர் 1—என்று சொல்லிவிட்டார்!"

" ஆமாம்! அதற்கும் உன் மகிழ்ச்சிக்கும் என்ன தொடர்பு?"

" அவர், அப்படிச் சொன்னதாலேயே, மகிழ்ச்சி, எனக்கு" என்றான். திகைத்தேன், நான். சிரித்தபடி கேட்டான்.

" இருட்டு வேளையில்—திருட்டு வேலையிலீடுபடுபவன், உன்னைப் பார்த்து, நண்பன் என்று அழைப்பதையா விரும்புவாய்?"

" சேச்சே! யாரும், இசையார்?"

'மலான், உன்னை, 'மகா உத்தமன்' எனப் பாராட்டுவதை, எதிர்பார்ப்பாயா?"

" பைத்தியமல்ல, நான்!"

" ஹிட்லர், உயிரோடு இருந்து, உனக்கு, 'நல்லவன்' பட்டம் சூட்ட வந்தால்......"

" உலக நிந்தனைக்காளாவேன்!"

" அதனால்தான், ஆச்சாரியார் சொற் கேட்டதும் ஆனந்தமடைந்தேன்.—அவர், நம்மை, எதிரியென்றார். பெறற்கரிய பேறு! கள்ளக்கோலேந்தி, நண்பன் என்றழைப்பதைவிட, விரோதி என்று சொல்வதுதானே, 'இவன். நீதிமான்!' என்று நிரூபிக்கும்? அவருக்கு, நாம், எதிரிகள்தாம்! தேசத்தியாகிகள் இவ்வண்ணம் செப்பியிருந்தால் வெட்கப்படவேண்டிய விஷயம்தான். ஆச்சாரியார், யார்?"

"தேசத் தியாகி அல்ல—சமூக விரோதி—ஜனநாயகத் எதிரி—பாசிச பாதுகாவலர்!"

" அவருக்கு நாம் எதிரி! நான்காண்டில் இந்த நல்ல பெயரை எந்தக் கட்சியாவது, பெற்றதுண்டோ?"

வீரன் கேட்டான்! பதில் சொல்லவில்லை—ஒப்பினேன்—உள்ளம் குளிர்ந்தேன்.

பம்பாய் தி. மு. கழக முதல் மாநாடு

உறுப்பினர்களுக்கு வேண்டுகோள்

15—10—53 அன்று மாலை 6 மணியளவில், மாநாட்டு வரவேற்புக் குழு உறுப்பினர்கள் கூட்டம் கழக அலுவலகத்தில் நடைபெறும்.

அதுபோது தாங்கள் வரவேற்புக் கட்டணத்திற்குரிய ரூபாயுடனும், நன்கொடைப் புத்தகத்திற்குரிய தொகையுடனும் வர வேண்டுகின்றோம் என தோழர்கள் சூரியசங்கரன், எஸ். தியாகராசன் ஆகியோர் கேட்டுக்கொள்கின்றனர்.

கண்டனக்கூட்டம்

13—10—53 செவ்வாய் மாலை

இடம்: மீர்சாகிப்பேட்டை, வெங்கிடாசல முதலி தெரு

தலைவர்:
தோழர் டி. ஏ. வெங்கிடாசலம்

தோழர்கள்
ம. போ. வேதாச்சலம்
பூபதி
வி. கன்னியப்பன்
மற்றும் பலர் பேசுவார்கள்

—43-வது வட்ட தி. மு. க.

ஐந்தாண்டுத் திட்டம்

மலையளவு தொகை மடுவாகிறது

கர்நூல், அக். 10—

ஐந்தாண்டுத் திட்டத்தில், சென்னை மாநிலத்திற்கு ஒதுக்கியிருந்த ரூ. 140 கோடியில், ஆந்திர மாநிலத்திற்கு ரூ. 51 கோடியும், மத்திய சர்க்காரின் உதவியாக பழைய சென்னை மாநிலத்திற்கு வாக்களிக்கப் பட்டிருந்த ரூ. 20 கோடியில் ஒரு பகுதியும் கிடைக்கும்.

ஆந்திர அரசுக்கான திருத்தப்பட்ட திட்டம், மத்திய சர்க்காருக்கு அனுப்பி வைக்கப் படும்.

பொதுவாக, திட்டத்திற்கு தேவையான தொகையை, மாநில அரசே தான் தேடிக்கொள்ள வேண்டும். இந்தப்படி, பழைய சென்னை சர்க்காருக்கு, இந்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ. 140 கோடி மதிப்பிட்டிருந்த யூனியன் சர்க்கார், தருவது ரூ. 20 கோடியே; அதில், $17\frac{1}{2}$ கோடி ரூபாய் பெற்றுக் கொள்ளப் பட்டது.

எஞ்சியுள்ளது, ரூபாய் $2\frac{1}{2}$ கோடிதான். இந்த மானியத்தைப் பங்கு போடும் உரிமை, சென்னை—ஆந்திர சர்க்கார்களுடையதாகும்.

★★☆★★☆★★☆★★☆★★☆★★☆★★☆★★

சென்னையில் எதிர்பாருங்கள்!

நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களும்
அவர் தம் குழுவினரும் நடிக்கும்
சி. என். அண்ணாதுரை தீட்டிய

காதல் ஜோதி

நாடகம் நடைபெறும்
நாடக டைரக்ஷன்: எம். எஸ். முத்துகிருஷ்ணன்
★
இடம், தேதி-பின்னர் அறிவிக்கப்படும்

முன்னர் அறிவித்தபடி
சென்னை ஒற்றைவாடை தியேட்டரில்,
17, 18—10—53 சனி, ஞாயிறுகளில்,
நாடகம் நடைபெறுது.

★★☆★★☆★★☆★★☆★★☆★★☆★★☆★★

கழகக் கூட்டம்

★

ஆவடி:
13—10—53 செவ்வாய் மாலை
தலைவர்: K. M. கண்ணபிரான்
பேச்சாளர்கள்:
D. V. நாராயணசாமி
S. S. தென்னரசு
V. S. கோவிந்தராசன்

★★★★★★★★★★★★

செட்டிநாட்டு வட்டார தோழர்களுக்கு

"கல்லக்குடி அறப்போரில், இரண்டாவது படைக்குத் தலைமை தாங்கிச் சென்று 3 மாத தண்டனை பெற்ற தோழர் காரைக்குடி இராம-சுப்பையா அவர்கள் 18—10—53 அன்று விடுதலை பெறுகிறார். காரைக்குடி நகரம் அவருக்கு மகத்தான வரவேற்பளிக்கக் காத்திருக்கிறது.

"அன்று காலையில், புதிய கழகங்கள் அமைப்பு பற்றியும், செட்டி நாட்டில் நமது இயக்கத்திற்கு அதிக ஆதரவு தேடுவது பற்றியும், இன்னும் பல ஆக்க வேலைகள் பற்றியும் ஆலோசிக்க வேண்டியிருப்பதால், தோழர்கள் அனைவரும் தோழர் சண்முகதாசன் அவர்களின் இல்லத்திற்கு காலை 9-மணிக்குள் வந்து சேர வேண்டுகிறேன். புதிய கழகங்கள் அமைக்க விரும்பும் வேறு பகுதித் தோழர்களும் கலந்து கொள்ளக் கோருகிறேன்" என்று, நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் மு. அ. கருப்புசாமி அறிவிக்கிறார்.

இந்தியர்களை விரட்ட முயற்சி

தென்னாப்பிரிக்காவில் தொல்லை வளர்கிறது

ஜோகன்ஸ்பர்க், அக். 10—

மில்ஸ்ட்ரும் நகரிலுள்ள 200 இந்திய வியாபாரிகளை, அவர்களுடைய தற்போதைய வியாபாரஸ்தலத்திலிருந்து ஒரு மைல் தூரமுள்ள இடத்திற்கு அனுப்பிவிட அதிகாரம் கோரி, அந்நகர் முனிசிபாலிடி நிலக் குத்தகை ஆலோசனைக் குழுவிடம் கொடுத்துள்ள மனுவை எதிர்த்து, இந்திய வாணிபர்கள் சார்பில் வாதாடிய வழக்கறிஞர், 'இம் மனுவின் நோக்கம் இந்தியர்களை அடியோடு தொலைப்பதே,' என விவாதித்தார்.

இந்தியர்களை அடிபணியச் செய்யவும், தங்கள் தாயகம் சென்றுவிட அனுமதிக்கும்படி அவர்கள் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளும்படி செய்யவும் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்றும், இதற்கு அங்கீகாரம் அளித்தால், இதர சில நகரங்களும் இவ்வழியைப் பின்பற்றும் என்றும் டாக்டர் லோவன் விளக்கினார்.

காரணம் என்னவோ?

பம்பாய், அக். 6—

இங்கு கிடைத்துள்ள புள்ளி விபரங்கள்படி, நாடு முழுவதும் உள்ள துணி மில்களில், ரூ 71 கோடி பெறுமான 4,75,000 பேல் துணி தேங்கிக் கிடக்கின்றன. மில்களில் இவ்வளவு 'ஸ்டாக்' தேங்கியிருப்பது, சென்ற நான்கு ஆண்டுகளைவிட இந்த ஆண்டுதான் அதிகம் என்று சொல்லப்படுகிறது.

சிறைமீண்ட தோழர்கட்கு வரவேற்பும், பாராட்டும்

சென்னை

2—10—53ல், நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டி சிறை சென்று மீண்டு வந்த தோழர் என். நாதன் அவர்களுக்கும், காங்கிரஸ் காலிகளால் தாக்கப்பட்டு, மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று மீண்டு வந்த தோழர் வி. பெரியசாமி அவர்களுக்கும் வண்ணை கே. எஸ் பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகத்தில், தோழர் ராமச்சந்திரன் தலைமையில், 5—10—53ல் வரவேற்பளிக்கப்பட்டது. அதசமயம் தோழர்கள் கே. வி. கே. சாமி, ஆர். பி. மணி ஆகியோர் தோழர்களுக்கு மாலைகள் அணிவித்தனர்.

பின்னர் தோழர் ஆர். பி. மணி, ஆட்சியாளர்கள் அடக்குமுறையைக் கண்டித்தும், கழகக் கொள்கை நெறிச் செயலைக் கண்டித்தும் பேசினர். எவ்வளவு அடக்குமுறை வந்தாலும் அண்ணாவின் கட்டளைப்படி, கண்ணியம், கட்டுப்பாடுடன் கடந்து பணியாற்ற வேண்டுமென்று கூறி, வந்திருந்த எல்லா தோழர்களுக்கும் நன்றி கூறினார்.

* * *

எழும்பூர் 9-வது வட்டம் தி. மு. கழகச் சார்பில், ஆலைக்கார கோட்டிலும் ... நெடுவல் ... பெற்ற சண்முக சுட்டத்தின் ... செய்யப்பட்டு, 23-9-53ல் திருவள்ளூர் சிறை அனுப்பப்பட்ட தோழர்களான டி. கே. சாமி (...க் செயலாளர்) வெங்கடாசலம், இரா. வேந்தன் ஆகியோர் 6—10—53-ல் விடுதலை அடைந்தனர். சிறை ... செயலாளர் ஏ. என். ... தோழர்களால் சிறை மீண்டவர்களுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

மாயூரம்—பொய்யூர்

24—9—53ல், பொய்யூர் திமு. கழகத்தில் ரயில் நிறுத்தப் போராட்டத்தில் சிறை சென்று மீண்ட மாயூரம், மல்லசான்குளம் திருவிளநகரம், ... தோழர்களுக்கு தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

மாலை 4-30 மணிக்கு, சிறை சென்ற தோழர்களை மேள வாத்தியங்களுடன், ஊர்வலமாக பல முக்கிய வீதிகள் வழியாக அழைத்து வரப்பட்டு கடைவீதி வந்தடைந்தது. மாலை 6-30 மணிக்கு தோழர் ஏ. குஞ்சிதபாதம் அவர்கள் தலைமையில் பாராட்டுக் கூட்டம் ஆரம்பமாயிற்று. தலைவர் சொற்பொழிவுக்குப் பின், தோழர்கள் கே. ராமசாமி, ஆர். முத்துக்குமாரசாமி, டி. எ. இராமசாமி, திலை—வில்லாளன் ஆகியோர் இன்றைய அரசியல் நிலைமை பற்றியும், சமுதாயத்துறை பற்றியும் விரிவாக சொற்பொழிவாற்றினார்கள். முடிவில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குருக்கத்தி

ரயில் நிறுத்தப் போரில், இரண்டு மாதம் சிறை தண்டனை பெற்று, சிறை மீண்ட தோழர்கள் கோ. சாரங்கம், தி. செங்கையன், க. அருள்கோதர் ஆகியோர் 19—9—53ல், விடுதலை பெற்றனர். தோழர்களை, ரயில் நிலையத்தில் மாலை அணிவித்து, ஊர்வலமாய் அழைத்துச் செல்லப்பட்டனர். 2—10—53ல், தோழர்களுக்கு ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

ஆலடிக்கு முனை

ரயில் நிறுத்தப் போரில் சிறை சென்ற தோழர் ஆ. வை. இராமசாமிக்கு 20—9—53ல், வரவேற்பும், பாராட்டுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர் ஈசுவரன் கோபால் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

செங்கற்பட்டு

ரயில் நிறுத்தப் போரில் 3-மாதக் கடுங்காவல் தண்டனை அடைந்து, 1—10—53-ல், விடுதலை அடைந்த தோழர் ஜே. ஏ. வரப்புடன் சிறை புகுந்த தோழர்கள் டி. ஜெயராமன், என். கோதண்டன் ஆகியவர்களுக்கு. செங்கற்பட்டு புகை வண்டி நிலையத்தில், கழகத் தோழர்களாலும், மற்றும் பல தோழர்களாலும் மாலை அணிவிக்கப் பெற்று, ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு, சக்கர மைதானம் வந்தடைந்த இடையில், தோழர்களுக்கு சிற்றுண்டியும், குளிர்பானமும் வழங்கப்பட்டது.

கீவளூர்

ரயில் நிறுத்தப் போரில் சிறை சென்ற கீவளூர் வட்டார கிளைக் கழகத் தோழர்கள், 19-9-53ல் விடுதலையடைந்து திருப்புகலூரில் கீவளூர் புகைவண்டி நிலையத்தில், தோழர்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு, கடைத்தெரு சத்திரம் வந்தடைந்தது. சிறை மீண்ட தோழர்களை, தோழர் டி. ராஜசபா தலைமையேற்று பாராட்டிப் பேசினார். தோழர்கள் கு. கணபதி, இரா. ஆறுமுகமும் பாராட்டிப் பேசிய பின் தோழர்களுக்கு குளிர்பானம் வழங்கப்பட்டது.

* * *

சிறை மீண்ட தோழர்களுக்குப் பாராட்டுக் கூட்டம், 26—9—53-ல் கீவளூர் கீழவீதியில் தோழர் இரா. துரைராசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதசமயம், தோழர்கள் என். கே. சாமி, என். எஸ். இளங்கோ ஆகியவர்கள் தோழர்களைப் பாராட்டியும், தற்கால அரசியல் நிலைமையைப் பற்றியும் விரிவுரையாற்றினர்.

* * *

7—10—53ல், தோழர் ஏ. பரமசிவம் அவர்கள் தலைமையில், இரயில் நிறுத்தப் போரில் ஈடுபட்டு, மூன்று மாத சிறை தண்டனை பெற்று விடுதலை அடைந்த தோழர் வகாப் குழுவினருக்கு, பாராட்டு விழா நடைபெற்றது. அதுசமயம், தோழர்கள் எஸ். லெ. ராஜேந்திரன், சி. வி. எம். அண்ணாமலை ஆகியோர் பேசினர்.

ஆய்யப்பேட்டை

6—10—53ல், ரயில் நிறுத்தப் போரில் சிறை சென்று மீண்ட தோழர்களைப் பாராட்டி, தோழர் நாராயணன் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கே. டி. எஸ். மணி, சி. வி. எம். அண்ணாமலை, முகவை, ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் சிறை சென்ற தோழர்களைப் பாராட்டியும், ஆச்சாரியாரின் அடக்குமுறைகளைக் கண்டித்தும் பேசினர். இறுதியில் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை வாபஸ் வாங்கக் கோரியும், தி. மு. கழகத் தலைவர்களை விடுதலை செய்யக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேறின.

ஒண்டக்காமுத்தூர்

ரயில் நிறுத்தப் போரில், இரண்டு மாத சிறைத் தண்டனை பெற்று 29—9—53-ல், விடுதலையான தோழர் தி. இலட்சுமணன் அவர்கட்கு, 30-9-53-ல், தி. மு. கழகத் தோழர்களால் வரவேற்பும், பாராட்டுக் கூட்டமும் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் எஸ். வீ. சண்முகம் தலைமை தாங்கினார்.

தோழர்கள் க. கு. தாண்டவன், சி. சதாசிவம், எஸ். பி. பொன்னுசாமி, ஆர். பி. எஸ். மணி, செ. பழனியப்பன், எஸ். சி. பட்டிலிங்கம், குமரேசன், என். வி. ஆவைச்குமார் முதலானோர் தோழர் இலட்சுமணன் அவர்களைப் பாராட்டி சொற்பொழிவாற்றினார்கள்.

கோவை

ரயில் நிறுத்தப் போரில் கலந்து கொண்ட தோழர்களில் 24 பேர் இரண்டு மாத சிறைத் தண்டனையை முடித்துக்கொண்டு 29—9—53-ல் விடுதலையடைந்தனர். சிறை வாயிலில் நகர தி. மு. கழகச் சார்பில் மாலைகள் அணிவிக்கப்பட்டு, பாண்டு வாத்தியத்துடன் நகரின் முக்கிய தெருக்கள் வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டது. ஊர்வலம் தாளமுத்து—நடராசன் படிப்பகத்தை அடைந்ததும், படிப்பகத்தின் சார்பாக தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

மாலை, சிதம்பரம் பூங்காவில் சிறை சென்ற தோழர்களைப் பாராட்ட ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் சி. டி. தண்டபாணி தலைமை வகித்தார். சிறை சென்ற தோழர்களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டது.

தோழர்களைப் பாராட்டி தோழர்கள் ஈரோடு சின்னப்பராசு, கோவை செழியன், இராசமாணிக்கம் ஆகியோர் பேசினர்.

சிறை சென்று மீண்ட தோழர்களின் பட்டியல்:

ஆர். வி. நாதன், கலைமணி, நா. ராசன், வே. ஆ. கரிகாலன், க. அருண்மொழி, வி. சுப்பிரமணியம், கே. என். நடராசன், சுப்ரமணியம், கே. ராமசாமி, எ. வி. கந்தசாமி, வி. நடராசன், மருதாசலம், அமுல் ராஜ், கு. கந்தசாமி, தமிழ்மணி (பாண்டியன் படிப்பகம்), சின்னத்தம்பி, ஆச்சுமணி, தமிழ்மணி (செல்வபுரம்) பி. எஸ். வாசன், எ. எஸ். முத்துப்பிரகாசன், கே. சண்முகம், மருதமுத்து, பா. வி. முத்து, இலட்சுமணன்.

1—10—53ல் தோழர் கண்ணதாசன் அவர்கள் பேசிய கூட்டத்தின் உண்டியல் மூலம் வசூலான ரூ 16—5—0 தொகையை டால்மியாபுரம் போராட்ட நிதிக்காகக் கூட்டத்தில் நகர தி. மு. கழக சார்பாக அளிக்கப்பட்டது.

வைத்தீஸ்வரன் கோவில்

ரயில் நிறுத்தப் போரில் ஈடுபட்டு, இரண்டு மாத சிறை தண்டனை அடைந்து 6—10—53ல், விடுதலையான தோழர்கள் எ. வி. முருகையன், ராமசாமி, சம்பந்தம், பண்டரிநாதன், சாமிதுரை, லட்சுமணன், பட்டுக்கோட்டை, முத்துக்குமார் ஆகியோரை புகை வண்டி நிலையத்திலிருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு பின்பு பானங்கள் வழங்கப்பட்டது. 7—10—53ல் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் தோழர்களைப் பாராட்டி தோழர்கள் பி. நாராயணசாமி, எஸ். எம். வைத்திலிங்கம் ஆகியோர் பேசினர். பல தீர்மானங்கள் நிறைவேறின.

நாகை

27-9-53ல், அவுரித் திடலில், தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் வை. மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஜி. சர்ப்லிங்கம் சிறை சென்றவர்களைப் பாராட்டி மலர் மாலை அணிவித்தார். சிறை சென்ற தோழர்கள் டி. கோவிந்தராசன், வி. சம்பந்தம் ஆகியோர் சிறை அனுபவம் குறித்து பேசினர்.

அடுத்து தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் சிறைசென்றவர்களைப் பாராட்டியும், தன்னுடைய சிறை அனுபவம் குறித்தும், ஆச்சாரியாரின் இன்றைய சர்க்கார் நிலைகுறித்தும் பேசினார்.

வானளாவிய கட்டிடம்!

நியூயார்க், அக். 11—

நியூயார்க்கில் 25 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போது, மற்றொரு வானளாவிய கட்டிடம் 90 லட்சம் பவுன் செலவில் கட்டப் படும்; இம்மாளிகையில் 30 மாடிகள் இருக்கும்; 1956ல் கட்டிட வேலை முடியுமென தெரிகிறது.

காஞ்சிபுரம்

30—9—53-ல், சிறை சென்று மீண்ட தோழர்கள்: ஈ. தம்பிரான், எஸ். ஏகாம்பரம், ஜி. பூங்காவனம், சண்முகம், கோவிந்தராசு, திருநாவுக்கரசு, தேவராசு, நாகரத்தினம், ஜெயராமன், ராஜு, ஜானகிராமன், கணேசன், ஏழுமலை, எஸ். ஆறுமுகம், வி. வரதன், வி. சுப்ரமணியம், டி. குமாரசாமி, வி. அண்ணாமலை, கே. வரதன், கே. கோவிந்தசாமி, சேரன், டி. ஆர். மூர்த்தி, எம். சுப்ரமணியம், ராமகிருஷ்ணன், இ. எம். ஜெயராமன், ஏ. எஸ். மணி, ராமலிங்கம், பி. கச்சபாலையம், மாணிக்கவேலு, கச்சாலமுனியன், நாராயணசாமி, சின்னகுழந்தை, ஏகாம்பரம், கோவிந்தசாமி, பூங்காவனம், சி. வெங்கடேசன், குமாரசாமி, செ. நடராசன் ஆகியவர்கட்கு, புகைவண்டி நிலையத்தில், தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, கே. டி. எஸ். மணி, இரா. வெங்கடேசன், எம். வடிவேலு, சி. எஸ். பாலன் ஆகிய தோழர்களும், மற்றும் கிளைக் கழகச் செயலாளர்களும், உறுப்பினர்களும் மலர் மாலை அணிவித்து ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். மாலை 6 மணிக்கு தோழர் கே. செல்வராசு தலைமையில் பொதுக்கூட்டம் துவங்கியது. சிறை சென்ற தோழர்களுக்கு பல தனிப்பட்டவர்கள் சார்பிலும், கிளைக் கழகங்கள் சார்பிலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டது. நகர தி. மு. கழகச் சார்பில் தோழர்களுக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது.

சிறை சென்ற தோழர்கள் சார்பில், தோழர்கள் மாணிக்கவேலு, பி. கச்சபாலையம் ஆகியோர் சிறையில் நடக்கும் கொடுமைகள் பற்றி விவரித்தனர்.

அடுத்து தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ஏ. கே. வேலன் ஆகியோர் பேசினர்.

* * *

ரயில் நிறுத்தப் போராட்டத்தில் 6 வார சிறை தண்டனை அடைந்து மீண்ட தோழர்கள் டி. சீனுவாசன், கே. என். கமலநாதன், ஜி. முனுசாமி, ஜி. வேணு, கே. முனுசாமி ஆகிய தோழர்களை 6—10—53ல் ரயில் நிலையத்தில், இரா. வெங்கடேசன், சி. வி. எம். அண்ணாமலை மற்றும் கழகத் தோழர்கள் மலர் மாலை அணிவித்து வரவேற்றனர். மாலை 6-மணிக்கு தோழர் எம். எஸ். மணி தலைமையில் பொதுக் கூட்டம் துவங்கியது. சிறை சென்றோர் சார்பில், தோழர்கள் ஜி. முனுசாமி, டி. சீனுவாசன் ஆகியோர் பேசினர்.

பிறகு, தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, கே. டி. எஸ். மணி, ஈ. எத்திராசு ஆகியோர் ஆச்சாரியாரின் அடக்குமுறையைக் கண்டித்தும், காங்கிரஸ் வெறிச் செயல்களைக் கண்டித்தும் விளக்கமாகப் பேசினர்.

* * *

4—10—53 மாலை ரயில்வே நிலையத்திலிருந்து கருணாநிதி படிப்பகத்தின் சார்பில், தோழர் டி. சபாபதி தலைமையில், 3-மாத சிறை தண்டனையடைந்து சிறை மீண்ட தோழர்களுக்கு தோழர் சம்பத் அவர்களால் மலர் மாலை அணிவித்து தேநீர் விருந்தளிக்கப் பட்டது. பின்னர், மக்கள் புடைசூழ முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

செங்கற்பட்டு குள்ளம்பட்டி

27—9—53-ல், செட்டிபட்டி பதனி இறக்குவோர் சங்கத்தின் சார்பில், சிறை சென்று மீண்ட தோழர்களான குள்ளம்பட்டி சி. முத்துசாமி, ப. இராமலிங்கம் ஆகியோருக்கு வரவேற்பளிக்கப் பட்டது. மாலை நடந்த பொதுக் கூட்டத்திற்கு: தோழர் தானமுத்து தலைமை வகித்தார்.

வரப்பெற்றோம்

★

"திராவிட பூபதி"

ஆரியர்களுக்கும் — திராவிடர்களுக்குமுள்ள கலாச்சார வேறுபாட்டை, விளக்கும் நல்லதோர் நாடக நூல், "திராவிட பூபதி"

"ஆரியராவது, திராவிடராவது" என்று, போகிற போக்கில் கூறிவிட்டு தப்பித்துக் கொள்ள முயலுவோருக்கு இந்நூல் நல்ல சிந்தனையைத் தோற்றுவிக்கும் என்பது எமது எண்ணம்.

எழுதியவர்: 'விசுபதி'; கிடைக்குமிடம்: திராவிட கலா நிலையம், 57 முத்தாருன்னிசா பேகம் தெரு, சென்னை, விலை. ரூ. 2—0—0.

* * *

"அண்ணா நாடகத்தில் ஆச்சாரியார்"

மராட்டிய மண்டலாதிபதி சிவாஜியின் காலத்தில் மக்கள் மனதிலே மடமையை வளர்த்த காகப்பட்டரை மனதிலே கொண்டு, ஆசிரியர் இன்றைய ஆச்சாரியாரைப் படம் பிடிக்கிறார். நடை பாராட்டக்கூடியது.

ஆசிரியர் கோ. இறைமுடிமணி, விலை: 0—4—0; கிடைக்குமிடம்: தளபதி பதிப்பகம், 16—பி, ஆதியப்ப செட்டித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை சென்னை-2.

• • •

"இரத்த வெறியன் அசோகன்"

அசோகனின் இளமைப் பருவத்தில் அவன் செய்துள்ள அட்டகாசங்களையும், அவனால் அவதிக்குள்ளானவர்களின் சோகச் சித்திரங்களையும் தோழர் ப. உ. சண்முகம் நயம்பட எடுத்துரைத்திருக்கின்றார்.

[எழுதியவர்: ப. உ. சண்முகம், கிடைக்குமிடம்: ராணி பதிப்பகம், திருவண்ணாமலை; விலை: 0—8—0]

• • •

"கலை மலர்"

முற்போக்குக் கருத்துக்களைத் தாங்கி வெளிவரும் சினிமா மாத இதழ், கலை மலர். உயர்தரகக் காகிதத்தில் உள்ளம் கவரும் சித்திரங்களை ஏந்தி, மாத இதழாக வெளிவருகிறது. இளைஞர்கள் ஆதரவு கொடுத்தால 'கலை மலர்' வளரும் என்பதில் ஐயமில்லை.

[ஆசிரியர்: எச். ஆரி; விலை: 6 அணா, கிடைக்குமிடம்: 10, ராமானுஜ கூடம் தெரு சென்னை—21.]

தோழர்கள் க. பெ. ரங்கசாமி, பி. கருப்பண்ணன், பேசினர். வரவேற்பிறகுப் பதிலளித்து தோழர் ப. இராமலிங்கம் நீண்ட நேரம் பேசினார். இரவு, சிறை மீண்ட தோழர்களுக்கு விருந்தளிக்கப்பட்டது.

கூறைநாடு

ரயில் நிறுத்தப் போரில் சிறை சென்று மீண்ட ஆசிரியர் வேலாயுதம் மனற உறுப்பினர்களைப் பாராட்டி தோழர் ஆர். பழனிச்சாமி தலைமையில் மாயூரம் கூறைநாடு, குயவன் தெருவில் கூட்டம் நடைபெற்றது. தேநீர் விருந்திறகுப் பிறகு, தோழர்களைப் பாராட்டி, தோழர்கள், எம். சுப்ரமணியம், வி. எ பாண்டியன், எ. வேலு எம். எல். ஏ, கே. ஆர். சம்பந்தம் பி. ஏ., எம். எல். ஏ., மா. செங்குட்டுவன் ஆகியோர் உரை வழங்கினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, குறிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.